## செயற்பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், திருச்சி-17 அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: பொறி.ரா.சிவக்குமார், பி.இ.,
செயற்பொறியாளர், பொ.ப.து.,

*******

**செயல்முறை ஆணை எண். 87/2020/ நி.எ.1/நாள்: 28.12.2020.**

பொருள்: பணியமைப்பு – பொ.ப.து., - தமிழ்நாடு அமைச்சு பணித்தொகுதி – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2018-2019 மற்றும் 2019-2020-ம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான தேர்வு தொகுதி-IV-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பணிநியமனம் ஆணை வழங்கப்பட்டது - செல்வி.கி.சிவரஞ்சனி, இளநிலை உதவியாளர் – பணிவரன்முறை செய்து தகுதிகாண் பருவம் துவக்கி ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்:2496/ PSD-1/ 2020/நாள்:29.05.2020.
2. முதன்மை தலைமைப்பொறியாளர், நீர்வளஆதாரத்துறை மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது), பொ.ப.து., சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்.3(3)/35935/2020/ நாள்:17.09.2020.
3. தலைமைப்பொறியாளர், (கட்டடம்), பொ.ப.து., திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்.1(2)/ 5055/ 2020-5/ நாள்: 21.09.2020.
4. கண்காணிப்புப்பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருச்சி-1 அவர்களின் செயல்முறை ஆணை எண்.1414/ 2020/ நி.2/ 1415(20)/ நாள்:22.09.2020.
5. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.87/ 2020/ நி.உ.1/ நாள்:22.09.2020.
6. செல்வி.கி.சிவரஞ்சனி, இளநிலை உதவியாளர் பணியேற்பு கடித நாள்:22.09.2020.

*******

பார்வை எண்.1-ல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்பட்ட 2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான போட்டித்தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டு, பார்வை எண்.2-ல் காணும் முதன்மை தலைமைப்பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப்பொறியாளர், (பொது), பொ.ப.து., சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி நிலை எண்.8, ரூ.19500-62000 என்ற ஊதிய விகிதத்தில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, பார்வை எண்.3 முதல் 5-ல் காணும் செயல்முறை ஆணைகளின்படி செல்வி.கி.சிவரஞ்சனி இக்கோட்ட அலுவலகத்தில் 22.09.2020 பிற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

(த.பி.பா.)

தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம்-2016-ன் விதி 28(1)-ன்படி, செல்வி.கி.சிவரஞ்சனி, இளநிலை உதவியாளராகப் பணியேற்ற நாளான 22.09.2020 பிற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தும், தகுதிகாண் பருவத்திணை துவக்கி வைத்தும் இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

இவர் மூன்றாண்டுகாலத் தொடர் பணிக்காலத்திற்குள் இரண்டாண்டு காலத்தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும் எனவும், தகுதிகாண் பருவகாலத்திற்குள் பவானிசாகர் அரசுப்பணியாளர் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் மற்றும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்படும் துறைத்தேர்வான மாவட்ட அலுவலக நடைமுறை தேர்வில் தேர்ச்சி பெறுதல் ஆகிய நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

மேலும், தகுதிகாண் பருவகாலத்தில், தற்செயல் விடுப்பு மற்றும் வரையறுக்கப்பட்ட விடுப்பு நீங்கலாக பிறவிடுப்புகள் துய்க்க நேரிட்டால் தகுதிகாண்பருவம் நிறைவு காலத்திற்கான நீட்டிப்பு ஆணை பிறப்பிக்கப்படும் என்ற நிபந்தனையுடன் இவ்வாணை வழங்கப்படுகிறது.

28/12/20

செயற்பொறியாளர், பொ.ப.து.,
கட்டட (க&ப) கோட்டம், திருச்சி-17.

28.12.20

பெறுநர்:
செல்வி.கி.சிவரஞ்சனி,
இளநிலை உதவியாளர், பொ.ப.து.,
கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம்,
திருச்சி-17.

நகல்: பணிப்பதிவேட்டில் பதிவுகளிட.
நகல்: மாவட்ட கருவூலம், திருச்சி-01.
நகல்: கோப்புக்கு

(உண்மை நகல்)

செயற் பொறியாளர், பொ.ப.து.
கட்ட (கட்டுமானம்&பராமரிப்பு)கோட்டம்
திருச்சிராப்பள்ளி-17.